01. 'அரிது அரிது மானிடராதல் அரிது' எனக் கூறியவர் யார்?

……………………………………………………………………………………

02. சைவநெறி என்பதன் பொருள் யாது?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

03. ஆசாரத்தை எவ்வாறு வகைப்படுத்தலாம்?, சுருக்கமாக விளக்குக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

04. இருவகை ஆசாரங்களுக்கும் இவ்விரு உதாரணம் தருக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

05. சைவம் உணர்த்தும் சகல ஒழுக்கங்களுக்கும் ஆதாரமாக அமைவது எது?

……………………………………………………………………………………

06. ஆறுமுகநாவலர் இறை வழிபாடு பற்றி யாது கூறுகிறார்?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

07. சைவம் கூறும் நால் மார்க்கங்கள் / நாற்பாதங்களும் எவை?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

08. சைவம் எவற்றை உண்மை வழிபாடாக ஏற்றுக் கொள்வதில்லை?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

09. எவ்வாறானவர்களின் உள்ளத்தில் இறைவன் விரும்பி உறைகின்றார்?

……………………………………………………………………………………

10. அட்டபுஷ்பங்கள் எனக் குறிப்பிடப்படுபவை எவை?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

11. சுவாமி விபுலானந்தர் இறைவன் உவக்கும் மலர்களாக எவற்றைக் கூறுகிறார்?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

12. யோக வழிபாட்டில் ஈடுபடுபவர்கள் கடைப்பிடிக்க வேண்டியவற்றை எவ்வாறு அழைப்பர்?

…………………………………………………………………………………………………...

13. இயமம் என்றால் என்ன?

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

14. நியமம் என்றால் என்ன?

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

15. வாழ்க்கையின் நான்கு படிநிலைகளும் எவை?, அவற்றை வேறு எவ்வாறு அழைப்பர்?

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

16. வாழ்க்கையின் எப்படிநிலையில் உள்ளவர்கள் ஏனையவர்களை காக்க வேண்டும்?

…………………………………………………………………………………………………...

17. ஒப்புரவு என்றால் என்ன?

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

18. மனிதரிடையே ஒப்புரவை வளர்க்கும் சமய நடைமுறைகள் எவை?

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

19. கலையோடு இறைவனுக்கு அதீத ஈடுபாடுள்ளது என்பதற்கான உதாரணங்கள் சில தருக.

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

20. அறிவு என்பது யாது?

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

21. சைவ அறிவை எமக்கு ஊட்டுபவை எவை?

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

22. எவ்வாறான கல்வியால் பயனில்லை என்கிறார் வள்ளுவர்?

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………...

## “அலகுப் பரீட்சை 02இற்கான விடைகள்”

01. ஔவையார்.
02. கிடைத்த அரிய மானிடப்பிறவியை தக்கபடி வாழ்வதற்காக சைவசமயம் வகுத்துள்ள வழிவகைகளே சைவநெறியாகும்.
03. அக ஆசாரம் - உள்ளத்தோடு தொடர்புடையது.
    புற ஆசாரம் - உடலோடு தொடர்புடையது.
04. அக ஆசாரம் - மனதிலே இறை பக்தியோடு வாழ்தல், மனதில் நல்ல சிந்தனையோடு இருத்தல்…
    புற ஆசாரம் - உடலைத் துய்மையாக வைத்தல், வீடு, ஆலய சூழலை சுத்தமா வைத்தல்…
05. கடவுள் / இறை நம்பிக்கை.
06. ‘இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்’
07. சரியை, கிரியை, யோகம், ஞானம்
08. அகத்தில் அன்பும் நீதியும் ஒழுக்கமும் இல்லாது வெறுமனே பூ, நீர் கொண்டு செய்யும் வழிபாட்டை ஏற்பதில்லை.
09. அகத்தில் அன்பு, நீதி, ஒழுக்கம், என்பவை கொண்டோர் மனதில்.
10. கொல்லாமை, ஐம்பொறியடக்கம்
    பொறுமை, இரக்கம்
    அறிவு, உண்மை
    தவம், அன்பு
11. உள்ளக் கமலம், கூப்பியகைக் காந்தல், நாட்டவிழி நெய்தல்
12. அட்டாங்க யோகம்.
13. கொல்லாமை, களவு செய்யாமை, வாய்மை, பிறர் பொருளுக்கு ஆசைப்படாமை, ஐம்பொறியடக்கம் முதலான அறங்களை கடைப்பிடித்து வாழுதல்.
14. தவம், தூய்மை, தத்துவ நூல்களை கற்று விளக்குதல், மனத் திருப்தி, தெய்வ சிந்தனை என்பன அமையப் பெறுதல்.
15. பிரமச்சரியம் - மாணவ நிலை
    கிருகஸ்தம் - இல்லற நிலை
    வானப் பிரஸ்தம் - வனவாழ்வு
    சந்நியாசம் - துறவு நிலை
16. கிருகஸ்தம் / இல்லற நிலை
17. மற்றவர்கள் மேல் அன்பு பாராட்டி அரவணைத்து அவர்களுக்கு உதவி செய்து வாழ்வது.
18. சமய விரதங்கள், பண்டிகைகள், விழாக்கள்
19. இறைவன் கலாரூபமாக, நாதரூபமாக, நடராஜனாக விளங்குகின்றமை.
    திருக்கோயில்களில் சிற்பம், ஓவியம், இசை, நடனம் போன்ற கலைகள் வளர்கின்றமை.
    கலைகளின் அதிபதிகளாக இறைவனை போற்றுதல் - சரஸ்வதி, நடராஜர்
20. உலகத்தின் இயல்பை அறிந்து அதற்கேற்ப நல் வழியில் நடத்தலே நல்லறிவு.
21. திண்ணைப் பள்ளிகள், கோயில்கள், அறநெறிப் பாடசாலைகள்
    பக்தி இலக்கியங்கள், தத்துவ சாஸ்திரங்கள்
22. இறையுணர்வை ஏற்படுத்தாத கல்வியால் எப் பயனுமில்லை.
    ‘கற்றதனால் ஆய பயன் என்கொல், வாலறிவான்
    நற்றாள் தொழாஅர் எனின்?’